சிறுவர்கள் முதல்
பெரியோர் வரை
நாட வேண்டிய
★ ஒரே ஸ்தாபனம் ★
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

இன்றைய நாகரிகத்தின்
நவீன முன்னோடிகள்
ராக மாலிகா
ஆடை அகம்
4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 29 வியாழக்கிழமை (13-01-1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 48

# தமிழ்க் கட்சிகள் பெரும்பாலானவை கிழக்குத் தேர்தலைப் பகிஷ்கரித்தன!

## வாக்களிப்பு மார்ச் 1 இல்

கொழும்பு, ஜனவரி 13

கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் வவுனியா நகர சபைக்குமான தேர்தல் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல்களை பெரும்பாலான தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் முற்றாகப் பகிஷ்கரித்து விட்டன.

வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் காலக்கெடு நேற்று நண்பகல் முடிவடைந்த பின்னர் தேர்தல் நடக்கவிருக்கும் திகதியை தேர்தல் ஆணையாளர் வெளியிட்டார்.

இத்தேர்தலை விடுதலைப் புலிகள் முற்றாக நிராகரித்திருப்பது தெரிந்ததே.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஈ. பி. ஆர். எல்.எவ். குழு உட்படபல தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் இத்தேர்லைப் பகிஷ்கரித்திருக்கின்றன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வவுனியா உட்பட எந்த இடத்திலும் போட்டியிடவில்லை.

ரெலோ மற்றும் புளொட் குழுக்கள் மட்டும் சில இடங்களில் போட்டியிடுகின்றன.

இத் தேர்தலின் — வாக்களிப்பு மார்ச் முதலாம் திகதி காலை 7 மணியில் இருந்து மாலை 4 மணி வரை நடைபெறும். 7 லட்சத்து 62 ஆயிரத்து 903 பேர் வாக்களிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, மாநகர சபை, திருகோணமலை, அம்பாறை மற்றும் வவுனியா நகரசபைகளுக்கும் 36 பிரதேச சபைகளுக்கும் ஏழு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 50 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

பொத்தமாக 431 உறுப்பினர் பதவிகளுக்கு 2 ஆயிரத்து 13 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி 36 உள்ளூராட்சி சபைகளுக்கு போட்டியிடுகின்றது.

சுதந்திரக்கட்சியும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸும் தலா

(4ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அயல் நாட்டிலை இருந்து வந்தவையள் நடத்தின தேர்தலைப் போலத்தான் உதுவும் இருக்கும்......!

## மாணவருக்கு இவ்வருடமும் இலவச சீருடை கிடைக்கும்

### அமைச்சரவையில் நேற்று முடிவு

கொழும்பு, ஜன. 13

பாடசாலை மாணவருக்கு இந்த ஆண்டிலும் இலவச சீருடை வழங்கப்படும்.

நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இத்தகவலை கல்வி, கலாசார சுதேச வைத்தியத்துறை அமைச்சர் லொக்கு பண்டார வெளியிட்டார்.

உலக வங்கியின் அழுத்தத்தை தொடர்ந்து, இந்த ஆண்டில் இருந்து இலவச சீருடை வழங்கும் திட்டத்தை அரசு நிறுத்துவதற்கு முடிவு செய்திருப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

## வடக்கிற்கு பொருள்களை அனுப்பிய சிரேஷ்ட படை அதிகாரி மீது ராணுவ நீதிமன்ற விசாரணை

கொழும்பு, ஜன. 13

தடை செய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு அனுப்பிவைத்ததாகக் கூறப்படும் மோசடிச் சம்பவம் தொடர்பாக ஓய்வு பெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படவிருக்கிறார்.

இந்த அதிகாரி ஓய்வூதியத்துடன் மீண்டும் இராணுவத்தில் டணி புரிந்து வருகின்றார்.

இம்மோசடி தொடர்பான சாட்சியங்களை குழப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தொடர்ந்தே இந்த அதிகாரி மீது இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று முன்னாள் இராணுவத்தளபதி உத்தரவிட்டார் என்று ''ஒப்சேவர்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதே வேளை—இம் மோசடி தொடர்பாக மேஜர் ஒருவரும் இராணுவ நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## படகு சேவை நாளை இல்லை

தைப்பொங்கல் தினமான நாளை வெள்ளிக்கிழமை கிளாலிப் படகுச் சேவை நடைபெறாது என்றும்—

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி தொடர்ந்து திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் — வாரத்தில் மூன்று நாட்கள் — வழமைபோல் படகுச் சேவை நடைபெறும் என்றும் — தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். [ஒ]

## தென்மராட்சிப் பகுதியில் இரவில் ஹெலித் தாக்குதல்

### வாகனங்களைத் தேடி வேட்டுக்கள்

தென்மராட்சி, ஜன 13

நேற்று முன்தினம் செவ்வாய் இரவு தென்மராட்சியில் பல இடங்களில் —வீதியில் சென்று கொண்டிந்த— வாகனங்கள் மீது ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

அன்றைய தினம் இரவு படகுச் சேவை இருந்ததால், கண்டி வீதியில் வாகன ஓட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

சாரதிகள், வெளிச்சங்களை அணைத்து, வீதி ஓரங்களில் வாகனங்களை நிறுத்தி பாதுகாப்பைத் தேடிக்கொண்டனர்.

இதேவேளை, செவ்வாய்க்கிழமை இரவு கிளாலிப் பகுதியிலும் ஹெலி ஒன்று தாக்குதல் நடத்தியது.

ஆனையிறவு முகாமில் இருந்து ஷெல்வீச்சும் நடத்தப்பட்டது. (ஒ-117-31)

## தொண்டா பேரன் விடுதலை

கொழும்பு, ஜன. 13

கைது செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து பொலீஸரால் தேடப்பட்டு வந்த — அமைச்சர் தொண்டமானின் பேரனான —ஆறுமுகம் தொண்டமானும் மற்றும் இருவரும் பொலீஸில் ஆஜராகி தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விளக்க அறிக்கை கொடுத்த பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இ.தொ.கா. பொதுச் செயலாளரின் அலுவலக அறை உடைப்பு சம்பந்தமாக ஆறுமுகம் தொண்டமான், இ.தொ.கா. நிர்வாகச் செயலாளரும் உபதலைவருமான ஏ எம்.டி.இறாஜன், மத்திய மாகாண சபை உறுப்பினர் என். கந்தசாமி ஆகியோருக்கு எதிராக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததும்—

அதனடிப்படையில் அவர்களைக் கைது செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததும்—தெரிந்ததே.

## பூநகரிப் போர்க் கைதிகள்; செஞ். அதிகாரிகள் பார்வை

யாழ்ப்பாணம், ஜன. 13

பூநகரி — நாகதேவன் துறை இராணுவ — கடற்படை கூட்டுத்தள தகர்ப்பின்போது கைது செய்யப்பட்ட சிங்களப் போர்க் கைதி 17 பேரை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் கடந்த 24 ஆம் திகதி பார்வையிட்டனர்.

விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் லான்ஸ் கோப்ரல் ரஞ்சித் குணசேகரா தலைவர் திரு. பிரபாகரனின் உத்தரவின் பேரில் மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

யுத்தக் கைதிகளில் மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பின் போது விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட நான்கு போர்க் கைதிகளும் அடங்கியிருந்தனர். (ஒ-3)

## கிளிநொச்சிக்கு கனேடியக் குழு

யாழ்ப்பாணம், ஜன. 13

கனேடிய நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை கிளிநொச்சிக்கு வரவிருக்கிறது.

இக்குழுவினர் குண்டு வீச்சினால் சேதமடைந்த கிளிநொச்சி ஆஸ்பத்திரி மற்றும் சேதங்களைப் பார்வையிடுவர்.

கனேடிய பிரதிநிதிகள் கிளிநொச்சி கல்வி அதிகாரிகள் மற்றும் வைத்திய அதிகாரிகளுடனும் பேச்சு நடத்துவர். (ஒ-3)

## மனித புதைகுழி விவகாரம்; ராஜதந்திரிகள் அக்கறை

கொழும்பு, ஜன. 13

சூரியகந்த புதைகுழிகளில் மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட விவகாரம் கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளிடையே அதிக அக்கறையை ஏற்படுத்தி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சூரியகந்த புதைகுழி தோண்டப்பட்ட மறுநாள் மேற்கு நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகள் பலர் சுதந்திரக்கட்சி எம்.பி. கேணல் அனுருத்த ரத்வத்தையைச் சந்தித்து புதைகுழி பற்றிய விவரங்களைத் திரட்டுவதில் ஈடுபட்டிருந்தனர் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

இப்புதைகுழி விவகாரம் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் அடுத்தமுறை நடக்கும்போது அங்கு கொழும்பு அரசுக்கு சவாலாக தலையெடுக்கும் என்று ''சண்டே ஐலண்ட்'' கருத்து வெளியிட்டுள்ளது. (ஒ-எ)

## தமிழ்குழுக்கள் ஆயுதத்துடன் நடமாடுவதை தடை செய்க!

### ஐ தே.க. வேட்பாளர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 13

தேர்தல் நடைபெறவுள்ள இடங்களில் பாதுகாப்புப் படையினர் தவிர ஏனைய இயக்கங்களின் அங்கத்தவர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதைத் தடைசெய்ய வேண்டும்.

தமிழ் பகுதிகளில் நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் ஐ. தே. க. வேட்பாளர்கள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவைச் சந்தித்து மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

கடந்த 4 ஆம் திகதி இந்த சந்திப்பு இடம்பெற்றது.

தமக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகவும் இந்த வேட்பாளர்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டனர்.

அரசியலில் இவைஎல்லாம் சகஜம் என்று ஜனாதிபதி அப்போது பதில் அளித்தாராம். (இ)

## தேர்தல் பாதுகாப்புக்கு மேலதிக துருப்புக்கள்!

கிழக்கில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களின்போது அங்கு மேலதிக துருப்புக்களை ஈடுபடுத்துவதற்கு இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்புக்கு தளபதி ஜெரி டி சில்வா வந்திருந்த சமயம், அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அங்கு நடந்த முக்கிய கூட்டம் ஒன்றில் கூடுதல் படையினரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்த அவர் ஒப்புக்கொண்டார். (ஒ-3)

## புக்காரா குண்டு வீச்சு! நெடுங்கேணிப் பகுதியில் தம்பதியர் உயிரிழப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் நெடுங்கேணிப் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் கணவனும், மனைவியுமாக இருவர் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர்.

நேற்று முன்தினம் முற்பகல் 10.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இரு புக்காரா விமானங்கள் மக்கள் குடியிருப்பு மீது நடத்திய இக்குண்டுவீச்சால் பல வீடுகள் சேதமடைந்தன. உழவு இயந்திரங்களும் சேதமடைந்தன.

இக்குண்டுவீச்சில் 4 பிள்ளைகளின் தந்தையான மங்கள ஜெயநாதன் (44 வயது), அவரது மனைவியான நவமணி வசந்தா (40 வயது) ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர். மற்றுமொரு பெண் படுகாயமடைந்தார்.

அப்பகுதியில் மாறி மாறி பரவலாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான புகையிலையும், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான செத்தல்மிளகாயும் நாசமாகின.

இந்தக் குண்டுவீச்சின் போது பாடசாலையில் இருந்த மாணவர்கள் பதற்றத்துடன் அங்குமிங்கும் சிதறி ஓடினர். (ஒ-3-15)

## இருவார நிவாரணம் மீனவர்களுக்கு கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜன 13

யாழ். மாவட்டத்தில் உள்ள கரையோரப் பகுதி மீனவர்களுக்கு உடனடியாக இரண்டு வாரகால உலர் உணவு நிவாரணத்தை வழங்குமாறு யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் பிரதேச செயலாளர்களைப் பணித்துள்ளார்.

யாழ். மாவட்ட மீனவர்களுக்கான நிவாரண விநியோகத்தை புனர்வாழ்வு அமைச்சு நிறுத்தியுள்ள போதிலும், இரண்டு வாரத்திற்க மட்டும் நிவாரணத்தை வழங்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதன்படி —

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 4 ஆயிரம் மீனவக் குடும்பங்களுக்கு அடுத்த வாரத்தில் இருந்து இருவார நிவாரணம் ப.நோ.கூ.சங்கத்தின் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளது. [ஒ-17)

## யாழ்.பல்கலைக்கழக அனுமதி: பதியாத மாணவர் இடத்திற்கு புதியவர்களை சேர்க்க முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ் பல்கலைக்கழக 1992-93 கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் தமது பதிவுகளை நாளைமறுதினம் 15 ஆம் திகதிக்கு முன்பு பதிவு செய்யாதவர்களின் இடத்துக்கு புதிய மாணவர்கள் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழக உப-வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா மேற்கண்ட தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் பெரும்பாலானவர்கள் இன்னும் தமது பெயர்களைப் பதிவு செய்யவில்லை என்றும்—

இவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ள நாளைமறுதினம் 15 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும்—அவர் தெரிவித்தார்.

பதிவு செய்யாத மாணவர்களின் எண்ணிக்கை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கு அனுப்பப்படவிருப்பதாகவும்—

அவர்களின் இடத்துக்கு, வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டு அடுத்து வருபவர்களுக்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி வழங்கப்படும் என்றும்—அவர் தெரிவித்தார்.

இதேவேளை — பௌதிக விஞ்ஞானத்துறைக்கு ஒரு தொகுதி மாணவர்களை அனுமதிப்பதற்கான பெயர்ப்பட்டியல் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளதாகவும்—அவர் தெரிவித்தார்.

## தென் மாகாணசபை தேர்தல்: ரணில், குரே, அனுரா மூவரும் பிரசாரத்திற்குப் பொறுப்பு!

கொழும்பு, ஜன .13

தென் மாகாண சபைக்கான தேர்தல் பிரசார வேலைகளை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மாத்தறை மாவட்டத்தில் அமைச்சர் சிறிசேன குரே, காலி மாவட்டத்தில் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா ஆகியோர் தலைமைவகித்து நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இத் தேர்தல் பிரசாரத்தின் கடைசிக் கட்டத்தில் அனுரா பண்டாரநாயக்காவுக்கு நெருங்கிய சில சுதந்திரக் [illegible] தேசியக்கட்சியில் தேர்தல்களில் ஏற்ற இட்டமிடப்பட்டிருப்பதாவும் சொல்லப்படுகிறது.

எதிர்வரும் மார்ச் முதல் வாரத்தில் தென் மாகாண சபைத்தேர்தல் நடைபெறும் என்றும்—

எதிர் வரும் பெப்ரவரி மாதத்தில் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஐந்தாண்டுகால சேவையைப் பூர்த்தி செய்து விடுவார்கள் என்றும்—

எம். பிக்கள் கட்சி மாறினாலும் அவர்கள் அதனால் பென்ஷன் பெறும் உரிமையை இழந்து விடமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## பல்கலை. ஊழியர்களின் சேவைக்காலம் நீடிப்பு

கொழும்பு, ஜன. 13

பல்கலைக்கழகங்களின் கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கப்படும் என பல்கலைக்கழக அலுவல்கள் அமைச்சர் திரு. திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்விசார் பணியாளர்களின் சுயவிருப்பில் ஓய்வு பெறும் வயதெல்லை 60 இலிருந்து 65 ஆகவும் கட்டாயமாக ஓய்வு பெறும் வயதெல்லை 65 இலிருந்து 70 ஆகவும் நீடிக்கப்படுகிறது.

கல்விசாரா பணியாளர்களின் இந்த வயதெல்லைகள் முறையே 55 இலிருந்து 60 ஆகவும், 60 இலிருந்து 65 ஆகவும் நீடிக்கப்படுகிறது.

இது குறித்து சகல பல்கலைக்கழகங்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவிக்கும்படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள மேசைகளும், கடைத் தளபாடங்களும், கதவுகளும் விற்பனைக்கு உண்டு. இல. 248, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (28887)

தமிழ்த் தட்டச்சு இயந்திரம் (கொட்ரிட்ஜ்) 19 அங்குலம் விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: த ஹோம் பினான்ஸ் கட்டடம், 155 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (28908)

### மலிவு விற்பனை

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இலவசமாக நேர அட்டவணை வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (சி-6892)

### உடன் விற்பனை

புறொயிலர் குஞ்சுகள் வந்துள்ளன. ஓடர் செய்தவர்கள் வந்து பெற்றுக் கொள்ளவும். வளர்ந்த கைலையிற் பேட்டுக் குஞ்சுகளும் உண்டு. திருமகள் ஸ்ரோர்ஸ், 705, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (28911)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

இரண்டரை மாதங்கள் நிறைவடைந்த, பூச்சி அகற்றிய பெண் அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: முகுந்தன் வைத்தீஸ்வரன், மானிப்பாய் ஆண்கள் பாடசாலை முன், மானிப்பாய். (சி/7023)

### பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத்தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். Taste Line Industries (Pvt ) Ltd., 14, Seenier Lane, Jaffna. (28797)

### வெற்றுப்போத்தல் தேவை

அவசர தேவைக்காக (முழு அளவு) வெற்றுப் போத்தல்கள் உடன் தேவை. நியாய விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: ரி. ஆர். ஆர். ஓ. லிமிட்டெட், 106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி/6944)

### ENGINEERING DRAWING

முதலாம் வருட பொறியியல் பீட மாணவர்களுக்கான Engineering Drawing வகுப்பு 15-1-94 ஆரம்பமாகின்றது. 03, வைமன் வீதி, நல்லூர். (28894)

## விக்னா கல்வி நிறுவனம்

வர்த்தகம்
திரு. தேவா
93 பரீட்சையில் தோற்றியவர்களுக்கு
மிட்டல்
Sat., Sun 10-00 — 11-00
12-30 — 1-30
ஆரம்பம்;
15 — 01 — 1994
(சி-7029)

## விக்னா கல்வி நிறுவனம்

அளவையியல்
திரு. விக்கி
93 பரீட்சையில் தோற்றியவர்களுக்கு
மீட்டல்
(Sat. Sun.)
ஆரம்பம்
15-01-1994
காலை 7-30 – 9-00
(சி/7027)

## விக்னா கல்வி நிறுவனம்

93 பரீட்சையில் தோற்றியவர்களுக்கு
மீட்டல்
DAY CLASSES

வர்த்தகம்:
திரு. வரதன்
Mon. 10 — 12
Tue., Thu. 1 — 2
Fri. 10 — 11

அளவையியல்:
திரு. A. பிரபாகரன்
Tue , Thu 12 — 1
Fri. 11 — 1
(சி-7030)

## MATHS CENTRE
NELLIADY

எனது நிறுவனமாகிய Maths Centreஇல் கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பொதுத் தேர்வுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடைபெற்ற நிகழ்வுக்கு மனம் வருந்துகிறேன்.

எனவே இது போன்ற தவறுதலான நிகழ்வுகள் இனிமேல் நடைபெறாது என உறுதி கூறுகிறேன்.

நி. வ. கி.
MATHS CENTRE.
(28914)

## NEPENTHE ELECTRIC SALUTARY TREATMENT UNIT

நோயோட்டி மூலிகை
**விசேஷ சிகிச்சை பிரிவு**
இல. 19 (24) பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

இலங்கையிலேயே முதன் முறையாக ஆரம்பிக்கப்படவிருக்கும் மேற்படி
**விசேஷ சிகிச்சைப் பிரிவு**
யாழ். தனியார் வைத்தியசாலைகளின் பிரதம வைத்திய அத்தியட்சகர்
வைத்திய கலாநிதி T. W. ஜெயகுலராஜா
அவர்களால்
**தைப்பொங்கல் தினத்தன்று**
பிற்பகல் 1-00 மணிக்குத் தொடங்கி வைக்கப்பட்டு
நயன பிருங்கா தைல விற்பனையும் ஆரம்பித்து வைக்கப்படும்.

| | |
|---|---|
| தலை மயிர் உதிர்தல் | தலை மயிர் முறிதல் |
| ஞாபக சக்திக் குறைவு | இளநரை |
| கண்பார்வைக் குறைவு | கபாலச் சூடு |
| உடம்பு எரிவு | உஷ்ணம் |
| கணச் சூடு | கணிமம் |

இவற்றுடன் 96 நயன ரோகங்களுக்கும் நிச்சயமான நிவாரணமான நயன பிருங்கா தைலமானது இலங்கை, இந்தியா, நேபாளம், சீனா, பூட்டான் ஆகிய நாடுகளில் கிடைக்கும் பல அரிய மூலிகைகளைக் கொண்டு பல வருடகாலம் ஆராய்ச்சி செய்து முதன் முறையாக இலங்கையிலேயே தயாரான அபூர்வ தைலம்.

நாட்பட்ட, மாற்றமுடியாத "தொய்வு" நோயையும் நிரந்தரமாகத் தீர்க்கக் கூடிய அரிய மூலிகை மருந்தும் இவ் விசேஷ சிகிச்சைப் பிரிவால் தயாரிக்கப்பட்டுள்ளது.

● முக்கிய குறிப்பு;
வரும்பொழுது தயவு செய்து சிறிய சுத்தமான வெற்றுப் போத்தலுடன் வரவும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

[28910]

## A BASIC ENGLISH COURSE FOR STUDENTS

A systematic course covering grammar, composition and other aspects with emphasis on
**"SPOKEN ENGLISH"**
BY Mr. T. SAGATHEVAN B. A. London.
Commencing 4-00 p. m. 14 — 01 — 1994

**YARL HALL**
93, MAIN STREET, JAFFNA.

ஆண்டு 6 முதல் O/L வரை
சகல பாடங்களும் நடைபெறுகின்றன.
புதிய வகுப்பு ஆரம்பம்;
15 — 01 — 1994
சனிக்கிழமை காலை 9-00 மணி
(6901)

## நன்றி நவில்கின்றோம்

07-01-94 அன்று இறைவனடி சேர்ந்த எனது அன்புக் கணவரும், எமது பாசமிகு தந்தையுமான

சூசைப்பிள்ளை இராயப்பு
(சில்லாலை)

அவர்களின் மரணச் செய்தி கேட்டு எம் இல்லம் நாடி அனுதாபம் தெரிவித்தோர், மலர்வளையங்கள் சாத்தியோர், இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும், சிறப்பாக பல்வேறு விதங்களில் உதவி நல்கிய புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி;
திருமதி இராயப்பு,
பிள்ளைகள்
றதினி, றமணி.

சில்லாலை, (28903)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தைத் தாங்கிவந்த தூண்களில் ஒருவரான
**அமரர் வித்துவான் சி. குமாரசாமி**
அவர்கள் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

இன்று மாலை 4.00 மணியளவில் கம்பன் கோட்ட மண்டபத்தில் அமரரது மறைவு குறித்து நிகழவுள்ள நினைவஞ்சலிக் கூட்டத்தில் அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர்.
(C/6958)

## நெல்லியடி சனசமூக நிலையத்தினரின் ☆ பொங்கல் விழா ☆

நிலைய முன்றலில் 14-01-1994
வெள்ளி பிற்பகல் 4-00 மணி

தலைவர்: திரு. ஆ. சிவநந்தன் அவர்கள்

★ நிகழ்ச்சிகள்:

மங்கள இசை: நாதஸ்வர வித்துவான் உடுப்பிட்டி ஜெகநாதன் குழுவினர்
1. தலைமையுரை
2. பிரதம விருந்தினர்:
   திரு செல்லமுத்து சிறினிவாசன் அவர்கள்
   விசேட ஆணையாளர் (பிரதேச செயலர், வடமராட்சி தெ. மே. பிரதேச சபை)
3. கௌரவ விருந்தினர்: திரு செல்வன்
   (வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்)
4. சிறப்பு விருந்தினர்: திரு. ஆ இராசேந்திரன்
   (உதவிக் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
5. பரிசில் வழங்கல்

கலை நிகழ்வுகள்:

★ நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலை மாணவர்களினதும், பழையமாணவர்களினதும் கலை நிகழ்வுகள்
★ திருமதி கிருபாஹரி யோகராசா ஆசிரியரின் மாணவிகளின் நடன நிகழ்வுகள்
★ நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை மாணவர்களின் நாடகங்கள்:
   1 மயா... காண்...   2 கவரியா...
★ நாதஸ்வர வித்துவான் ஜெகநாதன் அவர்களை பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்

**பட்டி மண்டபம்:**

எமது தமிழ்ச் சமுதாய அமைப்பில் குடும்பப் பொறுப்பைப் பெரிதும் தாங்கி நிற்பவர்
ஆண்களா? பெண்களா?

நடுவர்: கம்பவாரிதி திரு இ ஜெயராஜ் அவர்கள்
(அமைப்பாளர், அ இ கம்பன் கழகம்)

| ஆண்கள் என வாதிடுவோர்: | பெண்கள் என வாதிடுவோர்: |
|---|---|
| 1. திரு. பொன். கணேசமூர்த்தி | திரு இரா. செல்வவடிவேல் |
| 2. திரு. தி. திருநந்தகுமார் | திரு. த. சிவகுமாரன் |
| 3. திரு. ஆறுதிருமுருகன் | திரு. க. குமாரதாசன் |
| 4. செல்வன் சிறிபிரசாந்தன் | செல்வன் மணிமாறன் |

"இந்த மண் எங்களின் சொந்தமண்" — புகழ் எஸ் ஜி. சாந்தன்
"மாவீரா புகழ் பாடுவோம்" — புகழ் கே ஆர் சுகுமார்

**இணைந்து வழங்கும் "இன்னிசை கானம்"**

| | | | |
|---|---|---|---|
| ஆர்மோனியம் — ஸ்ரீபாஸ்கர் | | வயலின் — கேசவமூர்த்தி | |
| மிருதங்கம் — வேல்மாறன் | | தபேலா — வரதன் | |

✲ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ✲

கலைப்பிரிவு — நெல்லியடி சனசமூக நிலையம்
[28913]

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

நடைமுறைப்படுத்தும்
பாதிக்கப்பட்டோருக்கான
**தொழில் உதவித்திட்டம்**

✲ கோயில் தேவைகளுக்கும்
✲ விசேட வைபவங்களுக்கும்
✲ மற்றும் சகல தேவைகளுக்கும்

முழு உத்தரவாதம் உள்ள சுத்தமான
**பசு நெய்**
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
**ஒரு போத்தல் 175/- மட்டும்**

**ரி. ஆர். ஆர். ஓ. லிமிட்டெட்**
106, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
[சி-6954]

## கண்ணீர் அஞ்சலிகள்

புனித பத்திரிசியார் கல்லூரியின்
எமது மாணவச் சகோதரன்
செல்வன் மங்களஜெயநாதன் ராஜ்குமாரின்
அன்புப் பெற்றோர்
**திரு. திருமதி மங்களஜெயநாதன்**
ஆகியோர் 11-01-94இல் நெடுங்கேணியில் நடந்த விமானக்குண்டுவீச்சினால் மரணமெய்தினர் என அறிந்து இதயம் நெகிழ்ந்து, அவர்களிற்கு அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்

**A/L 1994**
உயிரியல் மாணவர்கள்
(28918)

## ஓராண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில்: | ஐங்கரன் அடியில்: |
|---|---|
| 26 | 26 |
| 01 | 12 |
| 1929 | 1992 |

**அமரர் Dr. கனகசபை பூரணலிங்கம்**
(வர்த்தலைவிளான், தெல்லிப்பழை)

திதி: 13 — 01 — 1994

வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு வழுவாது ஒழுகி, அன்பும், பண்பும், அறமும் பூண்டு எம்மை வளமாக்கிய வள்ளலே! எம் நெஞ்சம் நிறைந்த தெய்வமே!! உங்கள் ஆன்மா சாந்தியடைய மருதடி விநாயகன் மலரடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

தொண்டைமானில் இருந்து, [illegible]
(28907)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 13 | 05 |
| 01 | 01 |
| 1925 | 1993 |

திருமதி
**இரதிலக்ஷ்மி ஆனந்தகுமாரசாமி**
(முன்னாள் அதிபர்)

பல்லாண்டாக ஆசிரியர்க்குப்
பயிற்சி கொடுத்துப் பற்பல சேவை
தமிழர்க் காற்றிய தாயே உங்கள்
மறைவால் வாடும் மாணவர் குழாம்
மற்றும் விரிவுரையாளரோடு
ஊழியர் நண்பர் உறவினர் என்ன
யாவரும் துயரம் எய்திட மறைந்தாய்
ஆண்டுகள் பற்பல செல்லினும் உங்கள்
அன்பு முகத்தை அறிவுத் திறத்தை
என்றும் மறவோம் வாழ்க உன் நாமம்!

அதிபர், உப அதிபர்,
விரிவுரையாளர்.

ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.
(28916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## அத்தாவுடவின் ஆரம்பம்

அர்த்தமில்லாத யுத்தத்தை உடன் நிறுத்தி, சமாதானப் பேச்சுக்களின் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

தற்போது மக்கள் எல்லோரும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். அதனால் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்வர வேண்டும்.

எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அத்தாவுட செனிவிரத்னா அரசை மேற்கண்டவாறு வலியுறுத்தி இருக்கிறார்.

வடக்கு - கிழக்கில் யுத்தம் தொடங்கி மூன்றரை வருடங்களாகி விட்டன. அதனால் உண்டாகும் மனித அழிவுகள், உடைமைச் சேதங்கள், நாட்டுக்கு ஏற்படும் நட்டங்கள் என்பன ஆரம்பத்தில் இருந்தே வெளிப்படையாகத் தெரிந்தவை தான். ஆனால் சிங்கள மக்களில் பலரும் அதனை உணர்ந்து கொள்ளவில்லை. அரசின் பொய்ப் பிரசாரங்களினால் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ள முடியாமற் போயிற்று எனலாம்.

அண்மைக் காலமாக இந்த நிலையில் சிறிது மாற்றம் காணப்படுகிறது. அரசின் பொய்ப்பிரசாரத்தின் மத்தியிலும் யுத்தத்தின் பாதகமான விளைவுகளை சிங்கள மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர். யுத்தத்தில் விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து ஈட்டிய வெற்றிகளால் அடுத்த தரப்பில் உண்டான பெரும் இழப்புக்களும், நட்டங்களும் அரசின் பொய்ப்பிரசாரத்தை மூழ்கடித்து விட்டன. அதனால் தென்னிலங்கை மக்களுக்கு யுத்தத்தின் தன்மையையும் அதன் விளைவுகளையும் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பமும், வாய்ப்பும் கணிசமாக உருவாகியுள்ளன.

அதன் பெறுபேறாகவே தென்னிலங்கைப் பொதுமக்கள் தரப்பிலும் யுத்தத்தை நிறுத்தவேண்டும், தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் அண்மைக் காலமாக சிறிய அளவில் ஒலிக்கின்றன.

எனினும் அரசியல்வாதிகள் குறிப்பாக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள். தென்னிலங்கைப் பொதுமக்களின் கருத்துகளுக்கு செவிசாய்க்க மறுக்கின்றனர். மக்களின் புதிய நிலைப்பாட்டைத் திசை திருப்ப என்ன செய்யலாம் என்பதனைச் சிந்திப்பதிலும், அறிவிப்பதிலுமே அவர்களின் நாட்கள் கழிகின்றன!

எதிரணியில் உள்ள அரசியல்வாதிகள் சிலர், தேர்தல்கள் நெருங்குவதால் அவற்றை மனதில் வைத்து யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கத் தொடங்கியுள்ளனர். அவர்கள் இது விடயத்தை வெறும் வாக்கு வாங்கும் மந்திரமாக்காமல், நாட்டு நலன்கருதி இதயபூர்வமாகவே அதற்காக உழைக்கத் தயாராக இருக்கிறார்களா என்பது கேள்விக்குரியதாகும்.

அவர்கள் தாம் கூறும் கருத்துக்களைப் பகிரங்கமாகவே தெரிவித்து, இன்னும் நிலைமையைப் புரிந்துகொள்ளாத சிங்கள மக்களுக்கு உண்மையை உணரவைத்து யுத்த நிறுத்தம், அரசியல் தீர்வுக்கான ஆதரவைத் தெற்கில் பெருக்கவேண்டும். அவ்வாறு செய்தால் ஆளும்கட்சியும் இதே வழிக்கு வருவதற்கான நெருக்குதலாக அமையும்.

இந்த வகையில் திரு. அத்தாவுட செனிவிரத்னா தமது கருத்தை பொதுக்கூட்டத்தில் தெரிவித்தது போல, ஸ்ரீ. ல. சு. கட்சித் தலைவர்கள் உட்பட ஏனைய எதிரணியினரும் யுத்த நிறுத்தம், அரசியல் தீர்வு ஆகியவற்றின் அவசியத்தை சிங்கள மக்களுக்கு நேரில் வலியுறுத்த வேண்டும்.

பத்திரிகை, வானொலிகளுக்கு செவ்வி வழங்குவதை விட்டு, இவ்விடயத்தை பொதுமக்கள் மனதில் பதிக்கும் வகையில் ஒரு பிரசாரமாகச் செய்ய வேண்டும். அது ஒரு நல்ல ஆரம்பமாக இருக்கும்.

# உணவுப் பொருள்களை அரச அதிபர் தருவித்து விநியோகிக்க வேண்டும்

### ப. நோ. கூ. சங்கங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணத்தில் தற்போது உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் போன்றவை இல்லாமையால் அரசாங்க அதிபர் உணவுப் பொருள்களைக் கொழும்பில் இருந்து தருவித்து, கையிருப்பில் வைத்திருந்து, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இங்கேயே அவற்றைக் கொள்வனவு செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த 10ஆம் திகதி யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோர் நடத்திய உணவுப் பொருள்களின் பற்றாக்குறை மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் தொடர்பான கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட பிற தீர்மானங்கள் வருமாறு;

★ யாழ். செயலகம் கொழும்பிலிருந்து தருவிக்கும் பொருள்களை வர்த்தக திணைக்களத்தின் 7 கிளைகளுடாக விநியோகம் செய்வதால் அவை அனைத்தும் பாவனையாளரை சென்றடைவதில்லை. இதனால் பாவனையாளர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மேல் அதிருப்தி அடைகின்றனர். இதை நிவர்த்திசெய்ய சப்பல் மூலம் தருவிக்கப்படும் பொருள்களை சங்கங்களுக்கும் பகிர்ந்தளித்தல் வேண்டும்.

★ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவு குறைத்து வழங்கப்படுவதால் பாவனையாளருக்கு முழுமையாக வழங்கமுடியாதுள்ளது. ஒரு பரலில் இருக்க வேண்டிய 210 லீற்றருக்கு பதிலாக 200 முதல் 205 லீற்றரே சங்கங்களுக்கு கிடைக்கின்றது. குறையும் மண்ணெண்ணெய்யை அரசாங்க அதிபர் சங்கங்களுக்கு தந்து உதவ வேண்டும். கொழும்பில் இவ்வாறு பரல்களில் மண்ணெண்ணெய் குறைத்து அடைக்கப்பட்டு வருவதைத் தவிர்க்க இங்குள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் கொழும்பு சென்று கப்பலில் மண்ணெண்ணெய் எடுத்துவர அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் வசம் தற்போது உள்ள பல லட்சம் ரூபா பணத்தை வைப்பிலிட மறுக்கும் மக்கள் வங்கி பணத்தை வைப்பிலிட அனுமதிக்கும் வரை வங்கி மேலதிக பற்றுக்கான வட்டிக்கும் கடனுக்கான வட்டிக்கும் கழிவு தர வேண்டும். சங்கங்கள் கொழும்பில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான பணத்தையாவது மக்கள் வங்கி ஏற்று அதற்கான வங்கி ஆணைகளை வழங்க வேண்டும். (க-162)

# சிசிலை ஆச்சரியப்படுத்திய பரிசு!

கொழும்பு, ஜன. 13

பதவியிழந்த தளபதி சிசில் வைத்தியரத்னாவுக்கு புதிய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா, கண்டி கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்காவும் அவரது முன்னோர்களும் பாவித்த வாள் போன்ற மாதிரி வாள் ஒன்றை பரிசளித்தார்.

கடந்த டிசம்பர் 31ஆம் திகதி சிசிலுக்கு இராணுவத் தலைமையகத்தில் அளிக்கப்பட்ட பிரியாவிடை நிகழ்ச்சியில் இப்பரிசளிப்பு இடம் பெற்றது.

அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட உயர்நிலை இராணுவ அதிகாரிகளை மட்டுமல்ல, சிசில் வைத்தியரத்னாவையுமே இப்பரிசு ஆச்சரியத்துக்குள்ளாக்கியதாக ''சண்டே ரைம்ஸ்'' தெரிவித்தது.

பெரிய புராதன சீன மலர் ஜாடி ஒன்றும் சிசிலுக்கு ஜெரியினால் பரிசளிக்கப்பட்டது.

இப்பரிசு அன்று மாலை நடந்த பிரியாவிடை நிகழ்ச்சியில் வைத்து அளிக்கப்பட்டது.

பிரியாவிடை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டபோது சிசில் வைத்தியரத்தினா ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றிருந்தார். (இ-எ)

## லயன்ஸ் கழக கருத்தரங்கு

சண்டிலிப்பாய், ஜன. 13

வட பிராந்திய லயன்ஸ் கழகங்களின் வருடாந்த கருத்தரங்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் 15 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. பிராந்தியத் தலைவர் லயன் எஸ். இராமகிருஷ்ணன் தலைமையில் கருத்தரங்கு நடைபெறும். (க-135)

## அரச கணக்காளர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 13

அரச கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை எதிர்வரும் 22 ஆம் 23ஆம் 29ஆம் 30ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற உள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் பரீட்சைத் திணைக்கள ஒருங்கமைப்புக் கிளையில் அவற்றை சேகரித்துக் கொள்ளலாம் என யாழ்ப்பாணம் தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வி. ரி பெரியதம்பி அறிவித்துள்ளார். (இ-162)

# காட்டில் தலைமறைவான இராணுவக் கொமாண்டோ

கொழும்பு, ஜன. 13

கதிர்காமம் காட்டில் விசேட பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவக் கொமாண்டோ ஒருவர் தலைமறைவாகி விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ விசேட படையணியைச் சேர்ந்த இவர் அனுராதபுரம் வாசி ஆவார்.

தலைமறைவாவதற்கு முன்னர் இந்தக் கொமாண்டோ அப்பகுதியில் சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவரிடம் கடிதம் ஒன்றைக் கொடுத்து அதனை பொலீஸிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொண்டதாக லுணுகம்வெஹெர பொலீஸார் தெரிவித்தனர்.

தனது தாயார் சுகயீனமாக இருப்பதால் தாம் படையணியில் இருந்து வெளியேறுவதாகவும் அக்கடிதத்தில் அவர் எழுதியிருந்தார்.

தமக்கு தரப்பட்ட ஆயுதம் கதிர்காமம் காட்டில் குறிப்பிட்ட இடத்தில் உள்ள மரம் ஒன்றில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கடிதத்தில் கூறியிருந்தார்.

அதன்படி பொலீஸ் கோஷ்டி ஒன்று அந்த இடத்துக்குச் சென்று ரி 56 ரைபிள், மூன்று மகஸின் வெடிமருந்து மற்றும் பொருள்களை மீட்டது.

இந்தச் சம்பவத்தின் பின்னணி பற்றி உறுதி செய்ய பொலீஸார் கொழும்பில் உள்ள இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர். (இ-எ)

# இராணுவத்தின் கெடுபிடி மட்டக்களப்பில் அதிகரிப்பு

### முகமூடிகளுடன் சோதனை

கொழும்பு, ஜன. 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரிய கல்லாறு, மெதடிஸ்த தேவாலயப் பகுதியில் விசேட அதிரடிப்படையின் பெரிய முகாம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

கல்முனை, களுவாஞ்சிக்குடி, கல்லாறு பகுதிகளுக்குச் செல்லும் மக்கள் இம்முகாமில் உள்ள படையினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். மக்கள் எடுத்துச் செல்லும் அரிசி, சீனி ஆகியவற்றையும் நிலத்தில் கொட்டவைத்தே படையினர் சோதனையிடுகின்றனர்.

அவ்வழியால் செல்லும் வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. ஒரு வாகனத்தை சோதனை செய்ய படையினர் இரண்டு மணிநேரம் எடுக்கின்றனர்.

மஞ்சந்தொடுவாய், ஆரைப்பற்றை கல்லடி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 20 மைல் பிரதேசத்தில் 8 பெரிய இராணுவ முகாம்கள் உள்ளன.

சோதனையின் போது படையினர் முகமூடி அணிந்த நபர்களையும் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் மட்டக்களப்புக்குச் செல்லும், திரும்பும் மக்கள் பெரும் தொல்லைக்கு ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## புத்திர சிகாமணி நீக்கம்!

கொழும்பு, ஜன. 13

மத்திய மாகாண சபையின் உபதலைவரும் ஐ. தே. க. உறுப்பினருமான திரு வி. புத்திரசிகாமணி ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் இருந்து ஜனாதிபதியினால் நீக்கப்பட்டுள்ளார்.

1984 இல் இருந்து இவர் ஐ. தே. க. செயற்குழு உறுப்பினராக இருந்து வந்தார்.

மத்திய மாகாண முதலமைச்சருக்கு எதிராக அண்மையில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைப் பிரச்சினையில், திரு. புத்திரசிகாமணி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்காவுக்கு ஆதரவாக நடந்து கொண்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (இ-எ)

## அறிஞர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன 13

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 69 ஆவது பிறந்த நாள் விழாவின்போது அவருடைய பிறந்த நாள் அறநிதிய சபையினர் இப்பகுதியில் அரிய பணியாற்றிய மூன்று அறிஞர்களைப் பொன்னாடை போர்த்தும், பொற்கிளி வழங்கியும் கௌரவித்தனர். தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள், ஏழாலை பண்டிதர் வித்துவான் மு. கந்தையா, சுன்னாகம் திருமகள் அழுத்தக அச்சமைப்பு முதல்வர் திரு. செ. சின்னத்துரை ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்ட அறிஞர்கள் ஆவர். (க-152)

# கழிவு அகற்றும் வாகனங்கள் யாழ் நகரில் பற்றாக்குறை

### குப்பைகளை வளவில் புதைக்க ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜன. 13

கழிவகற்றும் வாகனங்கள் பற்றாக்குறையால் யாழ். மாநகர வீதிகளில் குப்பைகள் தேங்கிக் கிடக்கும் நிலை ஏற்படுகிறது.

மாநகர சபையினால் கழிவகற்றும் வேலைகளுக்கு என இரண்டு வாகனங்கள் மட்டுமே தற்போது பயன்படுத்தப்படுகின்றன.

இவ்விரு வாகனங்களைக் கொண்டும் யாழ். போதனா வைத்தியசாலைக் கழிவுகள், கொள்கலக் கழிவுகள், சந்தைக் கழிவுகள் ஆகியவையே முன்னுரிமை கொடுக்கப்பட்டு அகற்றப்பட்டு வருகின்றன.

இவைகள் அகற்றப்பட்டு மேலதிக நேரம் கிடைக்கும் சந்தர்ப்பங்களிலேயே வீதியோர குப்பைகள் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் யாழ். மாநகரசபை வாழ் மக்கள் தமது குப்பைகளை வீதிகளில் தேக்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் —

வீடுகளில் உள்ள வளவில் அவற்றை வெட்டிப் புதைக்குமாறும் கேட்கப்படுகின்றனர்.

சந்தர்ப்பம் கிடைக்கும் நேரங்களில்குப்பைகள் அகற்ற ஆவன செய்யப்படும் என்றும் மாநகரசபையின் சுத்திகரிப்பு அத்தியட்சகர் திரு. பொ. சிகப்பிரகாசம் தெரிவித்தார். (இ-162)

# இரத்தச்சோகை, இரத்த அமுத்தம், நீரிழிவு நோயாளருக்கு நல்ல உணவு சிப்பிக்காளான்

### தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இலவச பயிற்சி, ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜன. 13

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வீடுகளில் காளான் வளர்ப்பை ஊக்குவிக்கு முகமாக காளான் வித்துகளை வழங்கி வருவதுடன் காளான் வளர்ப்புத் தொடர்பான இலவச பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது.

மிகக் குறுகிய காலத்தில் இலகுவாக வீடுகளில் உற்பத்தி செய்யக் கூடிய சிப்பிக் காளான் என்ற காளான் ரகம் ஆகும்.

இதனை உற்பத்தி செய்து பயன்பெற விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகங்களில் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

காளானில் 2.90 சதவீத புரதம், 0.36 சதவீத கொழுப்பு, 53 சதவீத மாப்பொருள் மட்டுமல்ல, விற்றமின் பி, [illegible] பொஸ்பரஸ், சோடியம், பொட்டாசியம் [illegible] காணப்படுகின்றன.

காளானில் போலிக் அசிட் என்ற விற்றமின் பி வகை இருப்பதனால் இரத்தச் சோகையை குணப்படுத்தும் தன்மையை அது கொண்டிருக்கிறது. கனிப்பொருள்கள் இருப்பதனால், பல் எலும்பு வளர்ச்சிக்கும், உறுதிக்கும் அது உதவுகின்றது. மாப்பொருள் குறைவாக இருப்பதனால் நீரிழிவு நோயாளரும், கொழுப்புச் சத்து குறைவாக [illegible] இரத்த அழுத்த நோயாளரும் உண்ணக் கூடியது.

காளானில் சுவை மிகுந்த கறி, சூப், கட்லெட் பொரியல் ஆகியவற்றை செய்ய முடியும் — இப்படித் தெரிவிக்கப்படுகிறது. (இ-க)

## மண் உருண்டைக்குள் பற்றறி கடத்தல்!

யாழ்ப்பணம், ஜன. 13

உருளைக்கிழங்குடன், 'பென்ரோர்ச் பற்றறி' களைக் கடத்த முயன்ற இருவர் வவுனியா சோதனை முகாமில் படையினரிடம் சிக்கிக்கொண்டனர்.

கடந்த 7 ஆம் திகதி இச்சம்பவம் நிகழ்ந்தது.

உருளைக்கிழங்குடன் மண் உருண்டைகளையும் கண்ட படையினர் சந்தேகம்கொண்டு, மண்உருண்டை ஒன்றை உடைத்துப் பார்த்த சமயம் அதற்குள் 'பென்ரோர்ச்' பற்றறிகள் இருந்தன என்று தெரிவிக்கப் பட்டது.

இதனை அடுத்து அந்த இருவரும் சோதனை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (இ-45)

### வடக்கு - கிழக்கு பிரச்சினை:

# ஏனைய பகுதிகளுக்கு பரவ அனுமதிக்கப்படமாட்டாது

### ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஜன. 13

வடக்கு - கிழக்கு நெருக்கடி நிலை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு பரவ அனுமதிக்கப் படமாட்டாது.

ஜனாதிபதி விஜேதுங்க உடதும்பறவில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் திடசித்தம் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கல்வி மேம்பாட்டு நிதிய நன்கொடை வைப்பு விழா

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தமிழீழ கல்வி மேம்பாட்டு நிதியத்தின் மாவட்ட மட்ட நன்கொடை வைப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

கல்வி மேம்பாட்டு பேரவையின் தலைவர் அருட்திரு பிரான்சிஸ் யோசெப் அடிகளார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நிதிய விளக்கவுரையை யாழ் வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி நிகழ்த்துவார். யாழ். தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் செல்வி. ரி. பெரியதம்பி நிதியத்தை ஆரம்பித்து வைப்பார்.

தமிழீழ மாணவரின் கல்வி மேம்பாட்டை ஊக்குவித்தல் ஆசிரியர்களின் வாண்மையை வளர்த்தல் என்பவற்றிற்காகவே இந்நிதியம் பயன்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க-162)

# அரசியல் தீர்வு காண்பதே பிரச்சினை தீர உதவும்

### சண்டேரைம்ஸில் கட்டுரை

கொழும்பு, ஜன. 13

எமது நிலைவரத்தின் தன்மையின்படி வடக்கு கிழக்கு யுத்தத்துக்கு அரசியல் தீர்வு காணுவதே பிரச்சினையைத் தீர்க்க உதவும் — அரசியல் தீர்வைக் காணுவதற்கான பங்களிப்பை மட்டுமே இராணுவம் வழங்கமுடியும்.

சண்டே ரைம்ஸில் அதன் பாதுகாப்புத்துறைச் செய்தியாளர் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இருதரப்பினரும் தங்கள் நிலைப்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கு இதுவே உரிய தருணமாகும்.

அரசியல்-இராணுவ நடவடிக்கையை ஒன்றிணைந்து கொண்டு போவதற்கு ஏற்றதாக திட்டங்களையும் உபாயங்களையும் அரசாங்கம் மீள் மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். (இ-எ)

## கருத்தரங்கு

சண்டிலிப்பாய், ஜன. 13

சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய மூன்று கல்விக்கோட்டங்களைசேர்ந்த ஆரம்ப பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியருக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று 15ஆம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெற உள்ளது. (க-10-135)

## எழுத்தாளர் ஒன்றிய பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 13

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் பொங்கல் விழாவும் கலந்துரையாடலும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00மணிக்கு பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும். (இ)

# இளைஞர்களின் அறிவுக்கு மதிப்பளிக்க வேண்டும்

### தமிழ்த்தாய் மன்றவிழாவில் சொக்கன்

யாழ்ப்பாணம், ஜன 13

''இன்றைய இளைஞர்களின் ஆக்கங்கள் பிரமிப்பை உண்டு பண்ணுகின்றன. இக்கால இளைஞர்களின் அறிவுக்கு நாம் மதிப்புக் கொடுக்க வேண்டும்.''

''மாற்றம்'' சஞ்சிகையின் சார்பில் தமிழ்த்தாய் மன்றம் நடத்திய தமிழ் விழாவில் உரை நிகழ்த்தியபோது திரு க. சொக்கலிங்கம் (சொக்கன்) இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று உணர்ச்சி ஊட்டினார் கவிஞர் பாரதிதாசன். அதேபோன்று இன்று தமிழுக்கு இளைஞர்கள் எழுச்சி ஊட்டுகிறார்கள்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் உரை நிகழ்த்தியபோது கூறியதாவது:-

இன்றைய இளைஞர்கள் எதிர்காலத்தேவை எது என்பதை உணர்ந்து செயல்படுகிறார்கள். முன்னவர்களில் இருந்து மாறுபட்ட சிந்தனை கொண்டவர்களாகவும் எமது பிரதேசத்தையும் சூழலையும் நேசிப்பவர்களாகவும் பிரச்சினைகளின் மத்தியிலும் எதையும் எதிர்கொள்ளும் திறன் பெற்றவர்களாகவும் தம்மை உருவாக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள். நாட்டில் நிகழும் மாற்றங்களுக்கும் அர்த்தம் பொதிந்த வாழ்வுக்கும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் முக்கிய பங்காற்றுகின்றன. அந்த வகையில் மாற்றம் இதழும் தனது பங்களிப்பை வழங்குகிறது என்று கூறினார்.

திரு. க. தணிகாசலம், மாற்றம் சஞ்சிகை ஆசிரியர் யாதுமூரான் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

திரு ஆ. சி. முருகுப்பிள்ளை தேசாபிமானி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மாற்றம் சஞ்சிகையின் ஆண்டு மலரும் விழாவில் வெளியிடப்பட்டது. இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் திரு. க. ஆனந்தராசாவின் ''நல்லை நகர் நாவலர்'' இசைச் சொற்பொழிவும் இடம்பெற்றன. (க-111)

வான் தொட்ட நெடுமரமும் வளம் கொண்ட நில நீரும்
இவ்வையகத்தில் அவசியம் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பொங்கல் வெளியீடுகள்

அர்ஜுன், சுமா

❀ முதல் உதயம்

விஜயசாந்தி (இரு வேடம்), வினோத்

❀ பொலீஸ் லாக்கப்

சுப்பர்ஸோ வீடியோ ஓடியோ சென்ரர்

198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

(சி-6959)



## பரிசளிப்பு விழா

நல்லூர் கலைத் தமிழ் கழகத்தினரால் 13-12-93 இல் நடத்தப்படவிருந்த சைவ சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா நாளை வெள்ளி (14-01-94) பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி செங்குந்த இந்து கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

—செயலாளர்

(28927)



யாழ். ரீட்ரவுண் றோட்டறக்ற் கழகம் நடத்தும்

## தமிழர் பண்பாட்டு கோலப்போட்டி

மேற்படி போட்டிக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள சகலரிடமும் கோரப்படுகின்றன. போட்டி இரு பிரிவுகளில் நடத்தப்பட்டு தனித் தனியே இரு பிரிவினருக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | — | 1000/- |
| இரண்டாம் பரிசு | — | 750/- |
| மூன்றாம் பரிசு | — | 500/- |

முதல் 20 இடங்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலதிக விவரங்கள் விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. விண்ணப்ப படிவம் விநியோகிக்கப்படும் இடங்கள்:

பூபாலசிங்கம் புத்தகசாலை
(யாழ்ப்பாணம்)

மெடி எயிட்ஸ் பார்மஸி
(நல்லூரடி)

— செயல் திட்ட இயக்குநர்

(C/6960)



யாழ் மாநகராட்சி மன்றம்

ஊழியர் நலன்புரிச் சங்கம்

## பொங்கல் இன்னிசை விழா

காலம்: தைத்திங்கள் 1 ஆம் நாள் (14 01-94) வெள்ளி பி. ப. 3 மணி

இடம்: நாவலர் கலாசார மண்டபம்

தலைவர்: திரு வே.பொ பாலசிங்கம் (யாழ். மாநகர ஆணையாளர்)

பிரதம விருந்தினர்: திரு மு. இராமலிங்கம் B.Sc. Dip. in Edu. அதிபர், யாழ் / கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

நிகழ்ச்சி நிரல்

3-00
1) மங்கள விளக்கேற்றல்
2) இறை வணக்கம்
3) தலைமையுரை
4) பிரதம விருந்தினர் உரை

3-15
5) பொங்கல் இன்னிசை

இன்னிசை வேந்தர்:
பொன். சுந்தரலிங்கம் — பாட்டு
இசைஞான திலகம்:
V R இராதாகிருஷ்ணன் — வயலின்
இலயஞான திலகம்:
S. மகேந்திரன் — மிருதங்கம்
இசைக்கலா வித்தகர்:
S துரைராசா — கெஞ்சிரா
இசைக்கலா வித்தகர்;
A. செல்வரெட்ணம் — கடம்

6) நன்றியுரை:
திரு நா சோதிலிங்கம் (செயலாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யாழ் மாநகராட்சி மன்ற ஊழியர் நலன்புரிச் சங்கம்

10 - 01 - 1994 (சி-6957)


# மட்டு. வெருகல் பகுதியில் இரு போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜன. 13

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வெருகல் பகுதியில் விடுதலைப் புலிகள் போராளிகள் சென்று கொண்டிருந்த போது இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர்.

இதன்போது விடுதலைப் புலிகள் போராளிகளான கப்டன் தினகரன் (காத்தமுத்து யோகநாதன் — ஆயித்தியமலை), லெப்டினன்ட் பகீர் (கணேசமுத்து நாகேஸ்வரன் — சந்திவெளி) ஆகிய போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

## ஆலயங்களில்

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய கோயில் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம் மாகிறது. தேர்த் திருவிழா 26 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 27 ஆம் திகதியும் நடைபெறும்.

உற்சவகாலங்களில் தினசரி மாலை 6-30 மணியில் இருந்து திரு த. சிவகுமாரன் பெரிய புராணம் பற்றிய தெய்வீகப் பேருரையை நிகழ்த்துவார். (க)

★ ★ ★

அராலி மேற்கு வட்டியாவத்தையம்பதி ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் கோயில் நாளை வெள்ளிக்கிழமை பகல் 1 மணியளவில் விசேட அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும் விசேட பூசையும் நடைபெறும்.

மாலை 4 மணியளவில் மகர திபஜோதி பூசை நடைபெற்று சுவாமி வீதி வலம் வருவார். (க-161)

## ஜனாதிபதியின் செயலாளருக்கும் தூதர் பதவி

கொழும்பு, ஜன. 13

ஜனாதிபதியின் செயலாளரான திரு. கே. எச். ஜே. விஜேதாச வெளிநாடு ஒன்றுக்கு இலங்கையின் தூதராக நியமிக்கபடவிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. விஜேதாச முன்னைய ஜனாதிபதி பிரேமதாச ஆட்சிக் காலத்திலும் செயலாளராகப் பதவி வகித்தது தெரிந்ததே. [ஒ-எ]


## தேசத்திற்காக தேவ பாதத்தில்

(24 மணி நேர உபவாச ஜெபம்)

இடம்: கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள் 89, பிறவுண் வீதி, கொக்குவில்.

காலம்: 14 — 15 தை 94

நேரம்: காலை 9-00 - மறுநாள் காலை 9-00

''நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது'' யாக் 5:16

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

சபை மேய்ப்பன்.
லெ. மத்தியூஸ்

(289919)



## புரோயிலர் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா லோமன் (PRIMA LOHMAN) புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மற்றும் சிங்கப்பூர் (FOWL FOX) பவுல் பொக்ஸ், றனிகட் RANIGATE ஊசி மருந்து வகைகளும் உடன் விற்பனைக்குண்டு.

மல்லிகாபதி
சந்தை கிழக்கு ஒழுங்கை.
மானிப்பாய்.

]28920]


## கண்ணீர் அஞ்சலிகள்

### வித்துவான் சி. குமாரசுவாமி

அன்பால், அறிவால், பண்பால், ஆசானாய் துன்பம் வந்த வேளை ஆறுதல் தரும் நண்பனாய் எம்மோடு வாழ்ந்த அன்புத் தெய்வம் குமாரசுவாமி அவர்கள் மறைவு கேட்டு பேரதிர்ச்சியும் ஆறாத துன்பமும் அடைந்துள்ளோம்.

அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பேரஸ்கோ
3, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி 6962)

## மரண அறிவித்தல்

### கணபதி நாகம்மா

வேலணை 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதி நாகம்மா இல 66, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி) இல்லத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சரவணை கணபதியின் அருமை மனைவியும், சின்னத்துரை, சின்னம்மா, செல்லம்மா ஆகியோரின் சகோதரியும், தெய்வேந்திரனின் பெரிய தாயாரும், நாகேஸ்வரியின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-01-94) காலை 10 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
கோ. தெய்வேந்திரன்

66, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(28925)

## தபால்களை சேர்க்கவும்

யாழ்ப்பாணம், ஜன. 13

திருகோணமலை செல்லவிருக்கும் மாஹோ கப்பலில் தபால்களை அனுப்பவிருப்பதால் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு முன் வெளியூர்த் தபால்களை யாழ். தபாற் கந்தோரில் சேர்க்கும்படி யாழ். பிரதம தபால் அதிபர் கேட்டுள்ளார். [க]

## வேளாண்மை போட்டி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்படும் வதிவிட வேளாண்மைப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கூடுதல் மழை வீழ்ச்சி இருந்ததை அடுத்தே விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டிருக்கிறது. முதலாம் கட்ட பார்வையிடல் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை இடம்பெறும் (அ)

## நாளை

யாழ்ப்பாணம், ஜன. 13

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலை, பண்பாட்டுக் கழகத்தின் பொங்கல் கலை விழா நிகழ்ச்சிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

பண்ணிசை, வில்லிசை, கோலாட்டம், நாடகம் மற்றும் பட்டிமண்டபம் என்பன நடைபெறும்.

கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற வெள்ளிக்கிழமை, திருவெம்பாவைப் பஜனைகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். (அ)

★ ★ ★

தைப்பொங்கல் தினமான நாளை பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் காஞ்சிப் பெரியவர் ஆராதனை விழா நடைபெறும். பி.ப.4மணிக்கு விசேட பூஜை பஜனை என்பவற்றுடன் விழா ஆரம்பமாகும்.

'தெளிவு குருவின் திருமேனி காண்டல்' எனும் தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா சொற்பொழிவாற்றுவார்.

க.பொ.த. உயர் தர பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் செல்வன் ஜெ.ஜெகச்செல்வனுக்கு ஆசி வழங்கும் வைபவமும் விழாவில் இடம்பெறும்.

## 'மாஹோ' கப்பல் சனி புறப்படும்

வடமராட்சி, ஜன. 13

தற்போது பருத்தித்துறையில் மா மூடைகளை இறக்கி வரும் ''மாஹோ'' கப்பல் பெரும்பாலும் எதிர்வரும் சனிக்கிழமை திருகோணமலைக்குச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-173)

## தென்மராட்சியில் ஹெலி பிரசுரம்

சாவகச்சேரி, ஜன. 13

சாவகச்சேரிப் பகுதி மற்றும் தென்மராட்சி பகுதிகள் எங்கும் நேற்றுக் காலை ஹெலியில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் அள்ளி வீசப்பட்டன.

ஏராளமான பிரசுரங்கள் காற்றுடன் அள்ளுண்டு சென்றன. (ஒ-31-117)

## மூதூரில் புதிய முகாம்

யாழ்ப்பாணம், ஜன. 13

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பகுதியில் புதிதாக இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மூதூர் மல்லிகைத்தீவு குவாட்டர்ஸ் என்னும் இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த முகாம் அமைக்கப்பட்டது. (ஒ-3)

தமிழ்க்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

21 உள்ளூராட்சி சபைகளுக்கும் —

ரெலோ, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி [புளொட்] ஆகியன தலா ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்கும் —

50 சுயேச்சைக் குழுக்கள் 31 உள்ளூராட்சி சபைகளுக்கும் — போட்டியிடுகின்றன. (ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மயில்வாகனம் குட்டிப்பிள்ளை

உரும்பராய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட மயில்வாகனம் குட்டிப்பிள்ளை அவர்கள் 12-01-1994 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சு. வைத்திலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் மனைவியும், திருமதி இராசமணி செல்லத்துரையின் தாயாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, செல்வநாயகம், ம. சிவநாதன் (மானிப்பாய்) மற்றும் நாகேஸ்வரி - கனகரத்தினத்தின் சிறிய தாயாரும், த. செல்லத்துரை (இளைப்பாறிய P.W.D Overseer) யின் மாமியாரும், (சாந்தி) சாந்தமலர் - உதயகுமார் (மட்டக்களப்பு), ஸ்ரீறஞ்சனி தயானந்தன் (Canada), காலஞ்சென்ற உதயகுமார், (சந்திரன்) சந்திரகுமார் (Canada), செல்வி நிமலினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (13-01-1994) வியாழக்கிழமை 12 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
த. செல்லத்துரை
(மருமகன்)

''கந்தன் கருணை'',
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

(28921)

### கனகசபாபதி கனகசிங்கம்

(ஓய்வுபெற்ற அரச ஊழியர்)

அனுராதபுரம் மாவடியைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தில் வசித்தவருமாகிய கனகசபாபதி கனகசிங்கம் டிக்கோயாவில் 11 - 1 - 94 இல் காலமானார். இவர் கனகசபாபதி கற்பகம் தம்பதிகளின் அன்பு மகனும், தம்பிஐயா செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், வனஜா, பிரபாகரன், சுவாங்கி (சுவிஸ்), கிருபாகரன் (பிரான்ஸ்), கெங்காதேவி (ஜேர்மன்), கிருஜா (டிக்கோயா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனபாலசிங்கம் (தயா), இரவிக்குமார், வனிதாம்பாள் (சுவிஸ்), சத்தி மாஸ்ரர் (ஜேர்மன்), வசீகரன் (டிக்கோயா) ஆகியோரின் மாமனாரும், காலம்சென்ற காமாட்சி (சிவக்கொழுந்து), சற்குணம், பாலசிங்கம், நாகலட்சுமி (மாவிட்டபுரம்) ஆகியோரின் சகோதரனும், வே. க. குமாரசாமி (புங்குடுதீவு), க. செல்லத்துரை (மாவிட்டபுரம்), பறுபதம், வசந்தி (டிக்கோயா), ஜீவரெட்னம் (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனரும், செ. நல்லதம்பி, ஆ. அமுர்தலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும், மகாலிங்கசிவம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வேலுப்பிள்ளை (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்), காலம்சென்ற சபாரெட்ணம் (டிக்கோயா) ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12 - 1 - 94 புதன் கிழமை டிக்கோயாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
வே க. குமாரசாமி
(மைத்துனர்)

29/4C மருதடி வீதி,
நல்லூர்,

(28923)

### சிவகுருநாதர் அருட்பிரகாசம்

வட்டுக்கோட்டை மூளாய் வீதியை பிறப்பிடமாகவும், சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுருநாதர் அருட்பிரகாசம் காலமானார்.

அன்னார் சத்தியபாமாவின் அன்புக் கணவரும், கிருபாகரன் (லண்டன்), கருணாகரன் (நோர்வே), திருமதி இ கலைச்செல்வி (கொழும்பு), சிவகரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கந்தையா (கனகராயன்குளம்), இராமச்சந்திரா (ஒருங்கிணைப்பு முகாமையாளர் ஷப்றா, யாழ்ப்பாணம்), கனகசபாபதி, திருமதி நா. மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜகுமாரனின் (பிராஸ்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் 13-1-94 இல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கியாறு மயானத்திற்கு காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி

செல்வமகால்,
டச் றோட்,
சித்தங்கேணி.

(சி/6961)

### விசுநாதன் சீவரட்ணம்

(இளைப்பாறிய P. W. D ஓவசியர்)

சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வழக்கம்பரை தொல்புரத்தை வசிப்பிடமாக கொண்டவருமாகிய சீவரட்ணம் காலமாகிவிட்டார். அன்னார் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், சந்திரகுமார் (U. K.), தேவகுமார் (தேவகுணா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் வவுனியா) ராஜகுமாரி, விஜயகுமாரி, ஜெகதாம்பாள் ஆகியோரின் அருமைத் தந்தையும், குமாரசிவம் (மக்கள் வங்கி, சுன்னாகம்), சற்குணநாதன் (Lake Hcuse Colombo), சிவகுமாரி (முன்னாள் ஆசிரியை வேம்படி மகளிர் கல்லூரி), ஜெயசுந்தரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவசீலன், ஜெயசீலன், வானதி, குமாரதி, தயானாஜி, சிவானாஜி, மேறிஜா, இந்துஜெனன், சுஜிந்தன், நிரோஷன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-1-94) நண்பகல் 12 மணியளவில் வட்டுக்கோட்டை வழுக்கியாறு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி அறியத்தருகிறோம்.

தகவல்:
குமாரசிவம்
(மருமகன்)

இவான் வீதி,
வழக்கம்பரை,
தொல்புரம்.

(28926)


மீண்டும் சித்ராலயாவில் போட்டோஸ்ரற்

(சி-7022)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13 - 01 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org